DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No.35/2015
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW8 (LW10)
Defence

Name : Geetha

Father Name /
Husband Name :

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 26th February 2026

எதிரிகள் ஆஜர்.

முதண்மை விசாரணை

நான் தற்போது நெய்வேலி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 03/07/2014 அன்று நான் கிளியனூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது சிறப்பு உதவி ஆய்வாளர்

திரு.தேவேந்திரன் என்பவர் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்து முதல்கட்ட விசாரணை மேற்கொண்டு வழக்கு கோப்பினை என் பார்வைக்கு வைத்ததை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கில் காயம்அடைந்த தெய்வசிகாமணி மற்றும் ரவிசந்த்திரன் ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த திண்டிவனம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.ரவிசந்தரன் அவர்களை விசாரித்து மேற்படி காயம்பட்ட நபர்களுக்கான காயச்சான்றுகளை பெற்று வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

இவ்வழக்கின் எதரிகளை தொடர்ந்து தேடியதில் அவர்கள் தலைமறைவாகிவிட்டார்கள். பின்பு வழக்கின் விசாரணை முடித்து 07/08/2014 அன்று பிரிவுகள் 294(பி), 324, 506(2) இதசபடி இறுதிஅறிக்கை தாக்கல்செய்தேன்.

குறுக்கு விசாரணை

வழக்கு சம்பவம் 21/06/2014 காலை 09.00 மணி என்றால் சரிதான். இது குறித்து மூன்று நாட்கள் காலதாமதமாக புகார்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மூன்று நாட்கள் காலதாமதம் குறித்து எந்த விளக்கமும் கொடுக்கவில்லை என்றால் முதல் தகவல் அறிக்கையில் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துவந்ததால் காலதாமதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வழக்கின் அ.சா.1 மற்றும் அ.சா.2 காயம் அடைந்ததாக சொல்லப்படும் அன்றை தினமே பகல் 01.00 முதல் 02.00 மணிக்குள் புறநோயாளியாக சிகிச்சை பெற்று வீடு திரும்பிவிட்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. அ.சா.ஆ.3ல் சாட்சி ரவிசந்திரனுக்கு இடது முன்னங்கையில் வீக்கம், இடது கன்னத்தில் தொடு வலி, இடது தோள்பட்டையில் தொடுவலி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

21/06/2014 அன்று காலை 10.00 மணிக்கு தைலாபுரம் கிராமத்தில் வைத்து தடியால் தன்னை தாக்கியதாக அ.சா.ஆ3ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 தெய்வசிகாமணிக்கு மேல்உதட்டில்

வீக்கம் இருந்ததாகவும், இடுப்பில் காயம் இருந்தாகவும் மற்றும் முதுகில் தொடுவலி இருந்ததாகவும் அ.சா.ஆ-4ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

ஆனால் சாட்சி தெய்வசிகாமணி தன்னை தைலாபுரம் கிராமத்தில் 21/06/2014 அன்று காலை 09.00 மணிக்கு தடியால் தாக்கியதாக அ.சா.ஆ4ல் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அ.சா.1 மற்றும் அ.சா.2 வெவ்வேறு நேரத்தில் தாக்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த இறுதி அறிக்கையில் புகார்தாருக்கும் முன்விரோதம் காரணமாக சண்டை ஏற்ப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் என்ன முன்விரோதம் என்றால் நிலத்தில் பயிரிடுவதில் முன்விரோதம் இருந்தது.

அ.சா.1 கொடுத்த புகாரில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் வாதியின் நிலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அ.சா.ஆ.8ல் மாதிரிவரைபடத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் 1வது எதிரியின் உழவு நிலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் உழவு நிலம் என்றாலும் சவுக்கு பயிர் வைக்கும் நிலம் அல்ல என்றால் சரிதான்.

அ.சா.1 கொடுத்த புகாரில் பட்டியல் சாட்சிகள் 3 முதல் 5 வரையானவர்கள் சம்பவத்தை கண்ணுற்றதாகவும் தடுத்தாகவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சிகளின் வாக்குமூலத்திலும் அசா.1 புகாரிலும் எந்ததெந்த எதிரி எந்த சாட்சியை எந்த ஆயுததத்தால் எவ்வாறு தாக்கினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

அவ்வாறு எதிரிகள் எவ்வாறு சாட்சிகளை தாக்கினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லாததால் தான் இறுதி அறிக்கையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 மற்றும் அ.சா.2ற்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று மருத்துவர் சான்று வழங்கிய நிலையில் அவர்களை தாக்க பயன்படுத்திய ஆயுதம் தடி என்பதால் இதச 323-ன் கீழ் வழக்கு தாக்கல்

செய்திருக்கவேண்டும் என்றாலும் இதச பிரிவு 324-ன் கீழ் வழக்கு தாக்கல் செய்திருப்பது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல.

03/07/2014 அன்று மருத்துவர் காயச்சான்று கொடுத்துள்ள நிலையில் 27/05/2015 அன்றுதான் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா1 கொடுத்தது பொய்யான வழக்கு என்பதால் காலதாமதமாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும்இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

(Sd/-)xxxx,
நீதித்துறை நடுவர்,
வானூர்